

ஸ்ரீ காசி மஹாத்மியம்



PRICE
Rs. 8-00

காசி மாஹாத்மியம்



வெளியிட்டோர்:
ராக்கி பிரகாசன்
பஞ்ச மாளிகை, கயா.

விலை ரூ. 6-00



காசி மாஹாத்மியம்

காசி (வாரணாசி)

கிழக்கு ரயில்வே, வடக்கு ரயில்வே இந்த இரண்டு ரயில்வேக்களை இணைக்கும் மோசல் சராய் ஜங்சனில் இருந்து காசி (ராஜ்காட் ஸ்டேசன்) 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இதற்குப் பிறகு தான் பனாரஸ் கண்டோன்மென்ட் ஸ்டேசன் இருக்கிறது. காசி இரயில நிலையத்தில் இருந்து விஸ்வநாதர் கோவில் சுமார் 2 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த இரயில் நிலையத்தின் அருகில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு சத்திரம் ஒன்று இருக்கிறது கங்கை நதியின் படித் துறைகளையும், கோவில்களின் கோபுரங்களையும் நகரத்தின் அழகையும் பார்த்தவுடன் யாத்திரிகர்கள் மிக்க ஆனந்தமடைகிறார்கள். காசி நகரத்தின் வடக்கில் வருணா நதியும், தெற்கில்-அசி நதியும் கங்கை நதியில் கலக்கிறதனால் காசி ''வாரணாசி'' என்றும் அழைக்கப்படுகிறது. ஆதி காலத்தில் இருந்து அதாவது சத் யுகத்திலிருந்து ''வாரணாசி'' என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஆதி காலத்திலிருந்து காசி, இந்துக்களின் புகழ் பெற்ற தீர்த்த ஸ்தலமாக உள்ளது. சாஸ்திர பூர்வமாக தெரிய வந்தது என்னவென்றால், பகவான் மகாதேவ் தன்னுடைய திரி சூலத்தின் மேல் கால்களை வைத்து நின்று இந்த காசி நகரத்தைப் படைத்தார் என்றும் பகவான் சங்கரர் இந்த காசி நகரத்தில் இருந்து வருகிறார் என்றும் நம்பப் படுகிறது. ஆகையால் எந்த ஜந்தும் தன்னுடைய சரீரத்தை இங்கு தியாகம் செய்தால் மோட்சம் அடைந்து சிவலோகம் செல்வதாக ஐதீகம். ஆகையால் மக்கள் காசியிலே இறந்து விட, தங்கள் கடைசிக் காலத்தை இங்கேயே கழிக்கின்றனர்.

பகவான் விஸ்வநாதர் கோவிலை ஔரங்கசீப் உடைத்து விட்டான். தற்சமயம் இருக்கும் கோவில் மஹாராணி அகல்யா பாயினால் கட்டப்பட்டது. மேற்படி கோவிலில் பஞ்சாப் மஹா

ராஜா ரஞ்சித் சிங் தங்கங்களை பதித்து வைத்தார். கோவிலின் உயரம் 51 அடிகள். கோவிலின் உள்ளே சிவலிங்கம் வைக்கப் பட்டு இருக்கிறது. இந்த சிவ லிங்கம் காசியில் பிரசித்தி பெற்றது. கோவிலின் உள்ளே நேபாள ராஜாவால் கொடுக்கப் பட்ட ஒரு பெரிய மணி தொங்கவிடப்பட்டு இருக்கிறது. இதன் சத்தம் நீண்ட தூரம் கேட்கிறது. கோவிலின் நான்கு புறங்களிலும் ரூபாய்கள் புதைக்கப்பட்டு இருக்கிறது. காலையிலும், மாலையிலும் பகவான் விஸ்வநாதருக்கு பூஜைகள் நடக்கின்றது. சாவன் மாதத்தில் யாத்திரிகர்களின் வருகை அதிகமாக இருக்கிறது. பகவான் விஸ்வநாதரால் தான் காசி முக்கிய ஸ்தலமாக இருக்கிறது.

காசி விஸ்வநாதர் தங்க கோவில்

தசாஸ்வேமேத் (காட்) நதிக் கரையிலிருந்து ஒரு குறுகிய தெரு கோவில் பக்கம் செல்கிறது. இந்த கோவில் 1785ல் மகா ராணி அகல்யா பாயினால் (இந்தோர்) கட்டப் பட்டது. இந்த கோவிலில் பஞ்சாப் மகா ராஜா ரஞ்சித் சிங்கினால் 22 மனு தங்கம் வைக்கப்பட்டு இருக்கிறது. கோவிலில் மணி அடிக்கும் சத்தம் கேட்கும் போது ஜனங்கள் எல்லாம் தலையை குனிந்து கொள்கிறார்கள். மேற்படி சிவ லிங்கத்தை முஸ்லிம்கள் சேதப் படுத்தியது தெரிகிறது. ஆயிரக் கணக்கான மக்கள் சிவ லிங்கத்தின் ஞாபாகருத்திற்கும், தரிசனம் செய்யவும் தினமும் பல முறை கங்கை நதியில் ஸ்நானம் செய்கிறார்கள். சிவனை இலைகளைப் போல் நிறைய நல்ல பாம்புகளுடன் அலங்கரித்த நிழல்கள் இருக்கும் போது அவர் தலையில் கங்கை நீரை ஊற்ற வைத்தும், ஐந்து தடவை செய்யும் ஆரத்தி முக்கியமானது, பார்க்கத்தக்கது. பூஜை நடக்கும் போது நூற்றுக்கணக்கான மணி ஓசைகளும், மேள தாளங்களும் வாசிக்கும் போது கோவிலின் உள்ளே நுழைய மிகவும் உற்சாகம் கொடுக்கிறது.

கால பைரவர்

கால பைரவர் சிவனுடைய பக்தர். பைரவ நாதர் கோவில் மட்டும் தான் பனாரஸில் ஔரங்கசீப்பின் கையிலிருந்து தப்பித்தது. பைரவர் மத சம்பந்தமான நியாஸ்தர் (மாஜிஸ்டிரேட்). சிவனுடைய நகரமான காசியை கண்காணித்து வர பைரவரின் தூதுக்கள் நகரத்தின் ஒவ்வொரு பூளியில் வைக்கப்பட்டு இருக்கிறது.

அண்ணபூர்ணா கோவில்

அண்ண பூர்ணா கோவில் விஸ்வநாதர் கோவிலின் அருகில் உள்ளது. இது பதினெட்டாவது நூற்றாண்டில் கட்டப் பட்டது. லிருந்து தீபாவளி பண்டிகையில் மூன்று நாட்கள் அண்ண பூர்ணா தங்கச் சிலை உள்ள கோவில் யாத்திரிகர்களுக்காக திறக்கப்படுகிறது. காசியில் உள்ளவர்கள் பசி, பட்டினி இல்லாமல் இருக்க அண்ண பூர்ணா சிரத்தை எடுத்துக் கொண்டு இருப்பதாக ஐதீகம்.

விசாலக்ஷ்மி

அனைத்து யாத்திரிகர்களும் ஒன்று கூடி காசி வருவதற்கு ஒரு தீர்த்த ஸ்தலமாக இருக்கிறது. 1500 ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்களின் கோவில்கள் இருக்கிறது. விசாலக்ஷ்மி தேவி லட்சுமி, விஷ்ணு பகவானை சேர்ந்தது. விசாலக்ஷ்மி கோவில் ஒரு குறுகிய மீர் காட் அருகே சந்தில் இருக்கிறது. இந்த கோவில் மிகவும் [illegible] இருக்கிறது.

துர்கா கோவில்

மஹா துர்கா கோவில் காசி நகரத்தின் தெற்கே உள்ளது. இது பதினெட்டாவது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்த கோவிலில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் கூட்டம் இருக்கிறது. நவ ராத்திரியிலும் அதிக கூட்டம் இருக்கிறது. சண்டையில் ஜெயித்தால் ஒரு மணி மாட்டி வைக்கிறேன் என்று ஒரு ஆங்கிலேயர் வேண்டிக் கொண்டபடி, ஜெயித்தவுடன் இந்த கோவிலில் ஒரு மணி தொங்க வைத்து இருக்கிறார். மேலும் இந்த கோவிலில் குரங்குகள் அதிகமாக இருக்கிறபடியால் வெளி நாட்டவர்கள் தவறுதலாக குரங்கு கோவில் என்று பெயர் வைத்து இருக்கிறார்கள்.

சிரி சுவாமி பாஸ்கரானந் சமாதி

துர்கா கோவிலின் அருகில் சுவாமி பாஸ்கரானந் சமாதி மிகவும் அழகாக சங்மர்மங் கல்லினால் கட்டப்பட்டு இருக்கிறது. இந்த சமாதியின் பூந்தோட்டம் பார்க்க மிகவும் அழகாக இருக்கிறது. இதைப் பார்த்து பார்வையாளர்கள் மிகவும் பரவசம் அடைகிறார்கள். இந்த சமாதி சிவ லிங்கம் போல் கட்டப்பட்டு அனைவரும் போய் பார்ப்பதற்கு எப்போதும் கதவு திறக்கப் பட்டு இருக்கிறது.

துல்சி மனாஸ் மந்திர்

துல்சி மனாஸ் மந்திர் (கோவில்) துர்கா கோவிலுக்குப் பின் 1964ல் 2 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டப் பட்டிருக்கிறது. இந்த கோவிலின் சுவற்றில் கடவுள்கள் ராமர், சீதை, விஷ்ணு, லட்சுமி, அன்னபூர்ணா, ராமாயணம் எழுதிய துளசிதாசர் முதலியவர்களின சித்திரங்கள வரையப்பட்டு

இருக்கிறது. இந்த கோவிலின் பூந்தோட்டம், கடவுள் சிவன் தன் தலையில் கங்கையை வைத்து இருக்கிறதாக கட்டப்பட்ட கோவிலின் அருகில் இருக்கிறது.

மதர் இண்டியா டெம்பிள்

(பாரதா மாதா கோவில்)

இந்த கோவில் 1936ல் மகாத்மா காந்தியினால் திறப்பு விழா செய்யப்பட்டது. சிரிசிவ் பிரசாத் குப்தா என்பவர் ஆங்கிலேயர்களுடன் நடந்த சுதந்திர போரின் நினைவாக கட்டினார். இந்த கோவிலில் ஹிமாலய பர்வர்ததத்தின் சிகரம், திபெத் முதலிய இயற்கை காட்சிகள் காட்டப்பட்டு இருக்கிறது. இந்த கோவிலில் சிலை இல்லை. ஆனால் படங்கள் வரையப் பட்டு இருக்கிறது. இதன் அருகில் ஒரு லைபரரியும் கட்டப் பட்டு இருகசிறது.

கங்கை கரைகள்

கங்கை கரைகளில் படிக் கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. மகா ராஜாக்கள் கரைகளில் சிறு கோவில்கள் கட்டி வைத்துள்ளனர். லலிதா கரையில் நேபாளத்து ராஜா ஒரு சிவன் கோவிலை மரக் கட்டையினால் கட்டி இருக்கிறார்.

ஹரிசந்திரா காட் (கரை)

64 கங்கை கரைகளில் இது ஒரு கர்ரை (காட்). இந்தக் கரையினில் சுடு காடு இருக்கிறது. இந்த சுடு காட்டில் தான் அரிச்சந்திரன் வேலை செய்தார். இவர் வேலை செய்யும் போது தான் இவர் மனைவி சந்திரமதி தன் மகன் லோசிதாசனை தகனம் செய்ய வந்தார்.

சிந்தா காட் (கரை)

இந்தக் கரை காசி நகரத்தின் நடுவில் கங்கை கரை ஓரத்தில் இருக்கிறது. இதை மகா ராணி அகலியாபாய் இந்தோர் கட்டினார்.

தசாஸ்வேமேத் காட் (கரை)

ஐந்து முக்கியமான கரைகள் :

1. தசாஸ்வேமேத் காட்
2. அசிஸ் காட்
3. மணிக்கர்னிகா காட்
4. பஞ்ச் கங்கா காட்
5. வருணா சங்கமம்

இந்த ஐந்து முக்கியமான காட் (கரை)களில் தசாஸ்வேமேத் காட் புகழ் பெற்றது. திவோதாஸ் காசி ராஜா இந்த தசாஸ்வேமேத் கரையில்அஸ்வ மேத யாகம் செய்தார்.

மணிகர்ணிகா காட்

இது ஒரு சுடுகாடு. இந்த சுடு காட்டில் இருந்து கொண்டு தான் உயிர்களை சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கிறேன் என்று சிவன் விஷ்ணுவுக்கு ஒரு சுதியம் செய்து கொடுத்தார்.

பன்ஞ் கங்கா காட் (கரை)

இந்த கரையில் ஆலம்கிரி மசூதி கட்டி மேற்படி கரை புகழ் இல்லாமல் போய்விட்டது. இந்த கரையில் கார்த்திகை மாதத்தில் அனைவரும் வந்து ஸ்நானம் செய்கிறார்கள்.

காசி ராஜாவின் அரண்மனை

இந்த அரண்மனை கங்கை நதியின் தெற்கு பக்கத்தில் அழகாக கட்டப்பட்டு உள்ளது.

சன்ஸ்கிரித் யுனிவர்சிட்டி

காசியில் மிகவும் விசேஷமாக சமஸ்கிருத மொழி கற்றுக் கொள்கிறார்கள். தற்சமயம் இருக்கும் சமஸ்கிருத பல்கலைக் கழகத்தின் பெயர் "குயின்ஸ் காலேஜ்". இது பிரிட்டிஷ் காரர்களால் கட்டப்பட்டது. முக்கிய மந்திரி டாக்டர் சம்பூர்ணா நந்தி காலத்தில் கட்டப்பட்டது. இந்த பல்கலைக் கழகத்தில் மியூசியம், லைப்ரரி இருக்கின்றன. நல்ல அழகான பூந்தோட்டம் இருக்கிறது. இந்த பல்கலைக் கழகத்தில் கோவில்கள் கட்டப் பட்டுள்ளன. அரை சிவன் லிங்கமும் அரை பார்வதியின் விக்கிரமும் உள்ளது. தற்சமயம் இந்த பல்கலைக் கழகம் ஆயுர் வேத கல்லூரியாக இயங்கி கொண்டிருக்கிறது.

பனாரஸ் ஹிந்து யூனிவர்சிட்டி

பனாரஸின் தெற்கு முடிவில் 1300 ஏக்கர் நிலம் காசி ராஜாவினால் கொடுக்கப்பட்டது. இந்த பல்கலைக் கழகம் ரொம்பவும் பெரியது. மதன் மோஹன் மாலவியர் 1916ல் இந்த பல்கலைக் கழகத்தைக் கட்டினார். பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழகத்தின் முதல் வாசலில் இந்த பல்கலைக் கழகத்[illegible]டிய மதன் மோஹன் மாலவியாவின் சிலை இருக்கிறது. இந்த பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி, லைப்ரரி, [illegible]ருத அறிவியல், விவசாய நுட்பம், இசைக் கல்லூரி, க[illegible] முதலிய கல்லூரிகள் இருக்கின்றன. சமஸ்கிரு[illegible] ஒரு அழகிய கோவில் கட்டப்பட்டுள்ளது. இ[illegible] கழகத்தில் [illegible]தி செய்யப்ப[illegible]

யூனிவர்சிட்டி கோவில்

இந்த பல்கலைக் கழகத்தில் சிவன், லக்ஷ்மி, நாராயணன், துர்கா, பார்வதி, விநாயகர் முதலிய கோவில்கள் இருக்கின்றன. இதில் ருயா ஹோட்டல், பிர்லா ஹோட்டல் முதலிய ஹோட்டல்கள் இருக்கின்றன. இந்த பல்கலைக் கழகத்தில் பரோடா மகா ராஜா கேய்க்வார்வினால் மிகவும் செலவு செய்து ஒரு பெரிய நூல் நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதில் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை செய்து வருகிறார்கள்.

சாரநாத்

சாரணாத், பனாரசிலிருந்து 6 மைல் தூரத்தில் வடக்கு பக்கம் இருக்கிறது. இது புத்த மதத்தின் தாய் நாடு. காசியிலிருந்து ரிக்ஷா, கார், இரயிலில் சாரநாத் போகலாம். சாரநாத்தில் இரயில் நிலையம் இருக்கிறது. இங்கே பிர்லா சத்திரம் இருக்கிறது. 500 கஜம் தூரத்தில் சாக்குண்டி இருக்கிறது. கி.மு. 5 ம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. சாரநாத் நகரம் அசோகர், கனிஷ்கர், குப்தர் முதலிய அரசர்கள் காலத்தில் மேன்மேலும் சிறப்பாக இருந்தது. பாஹினி, ஹியின் சங் ஆக இந்த இரண்டு சீன யாத்திரிகர்கள் கி.மு. 5, 7ம் நூற்றாண்டில் மிகவும் வர்ணித்து இருக்கிறார்கள். சாரநாத்தில் செங்கற்களால் மிகவும் அழகாக புத்தர் கோவில்கள் கட்டப் பட்டுள்ளது. புத்த மதத்தினர்கள் அழிந்து போன செங்கல்கள், கருங்கற்கள் முதலியவைகளை வணங்குகிறார்கள். புத்தர் இங்கே 4 மாதங்களாக சாதாரண குடிசையில் இருந்தார்.

அந்த இடத்தில் 200 அடி உயர புத்தர் கோவில் கி.மு. 5 ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கிறது. இங்கு அருங் காட்சியகம் ஒன்று இருக்கிறது.

தாமெக் ஸ்தூப்

இதை அசோக மன்னர் கி.பி. 3 ம் நூற்றாண்டில் கட்டியிருக்கிறார். கி.பி. 5 ம் நூற்றாண்டில் பெரியதாக கட்டப் பட்டது.

மியூசியம்

இது கி.பி. 3 ம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. இதில் புத்தமதத்தின் வரலாறு முதலியன இருக்கின்றது. மஹாயன், வஜ்ராயன், தந்தராயன் பள்ளிக்கூடம் முதலியன இருக்கின்றன.

முல்காஞ் குடி விஹார்

இந்தக் கோவில் தங்கத்தில் இலங்கை ஆளுநர் காதர்ம பாலினால் கட்டப்பட்டது. இது ஜப்பானிய சிற்ப ஆசிரியர்களால் கட்டப் பட்டது. அஜந்தா பெயிண்ட்டினால் செய்யப்பட்டது.

போதிமரம்

முல்காஞ் குடி விஹார் கோவில் அருகில் புத்த கயாவில் இருக்கும் போதி மரத்தின் கிளைகள், அசோக மன்னர் அனுப்பி வைத்த மரம் இருக்கிறது.

சைனிஸ் கோவில்

இங்கே சைண கோவில்கள் கட்டப்பட்டு உள்ளது.

ஜெயின் கோவில்

சாரநாத் பெயிண்டிற்கு புகழ் பெற்றது. 24வது திர்தன்கர் சிரியாணாத் பிறந்து இறந்த இடம். இவ்விடத்தில் ஜெயின் கோவில் கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஜெயின் கோவில் கட்டப்பட்டுள்ளது. இங்கு பூங்கா இருக்கிறது. இதற்கு மான்கள் பூங்கா என்று பெயர். இங்கு தான் முதல் ஜென்மத்தில் புத்தர் மானாக பிறந்தார். இங்கு தாமரை குளம் ஒன்று இருக்கிறது

சாரநாத மஹாதேவ் கோவில்

சிவன் சாரநாத் என்று சொல்லப்படுகிறது. இந்த சிவன் கோவிலில் ஜுன், ஆகஸ்ட் மாதத்தில் பெரிய திரு விழா நடக்கிறது.

ஸ்ரீ காசி மாஹாத்மியம்

பஞ்சக்ரோசி யாத்திரையுடன் கூடியது

முதல் அத்தியாயம்

ஒரு சமயம் நர்மதை நதிக் கரையில் ஆனந்த மயமாக அமர்ந்து கொண்டிருக்கும் ப்ருகு முனிவரிடம் லோமசர் முதலான முனிவர்கள் காசி க்ஷேத்திரத்தின் மகிமையைப் பற்றி வினவும் போது அவர் பின் வருமாறு கூறினார். ''ஹே, முனிசிரேஷ்டர்களே ! ஸ்ரீ விஸ்வநாதர் ஆகிய பிம்பங்கள் சிவனைக் குறிப்பவையாகும். இவருடைய பிரபாவத்தினால் காசியில் உயிர் துறக்கும் பாவாத்மாவின் உயிர் கூட சந்தேகமின்றி முக்தி எய்தும். 'காசி' என்னும் வார்த்தையை சொல்வதினாலேயே மனிதர்களுடைய பாப ரூபமான மலை நாசமடைந்து ஞானம் கிட்டுவதினால் முக்தி அவசியம் கிட்டுகிறது. காசியில் நிரந்தரமாக வசிப்பவர்கள் உண்மையிலேயே அதிக புண்ணியம் செய்தவர்கள். ''முனிவரே! காசி நகரத்தின் மாஹாத்மியத்தைப் பற்றி எப்படி வர்ணனை செய்ய இயலும்?''

இரண்டாவது அத்தியாயம்

சத்தியபுரத்தில் வீராதி வீரரான பூரித்யும்னன் என்ற ராஜா அரசு புரிந்து வந்தான். அவனுடைய ஆயிரக்கணக்கான ராணிகளில் விபாவரா என்ற பெயருடையவள் பிரதம ராணியாவாள். தேவர்களைக் கூட வசியப்படுத்தும் காம தேவனுடைய வலையில் அவன் விழுந்ததால் அவன் முழு நாட்டையும் எதிரிகள் தங்கள் வசப்படுத்திக் கொண்டு விட்டனர். ராஜா பூரித்யும்னன் விபாவரா ராணியை உடன் அழைத்துக் கொண்டு பயங்கரமான விந்திய மலைக்குச் சென்றான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் ராஜாவிடம் ராணி சொன்னாள் ''ஓ ராஜனே!'' தாங்கள் காம தேவன் வசப்பட்டு நாட்டையும், மற்ற

ராணிகளையும் இழந்துவிட்டோ. இப்பொழுது நம்மால் மனித நடமாட்டமில்லாத இவ் வனத்தில் எங்ஙனம் வசிக்க இயலும்? எந்த மனிதர்கள் தர்மம், பொருள் ஆகியவற்றை தியாகம் செய்து விட்டு காம வசப்படுகிறார்களோ அவர்களுக்கு தங்களைப் போன்ற நிலைமை தான் உண்டாகும்.'' பிறகு அவர்கள் ராஜா, ராணி என்ற நிலைமையை தலை விதிப்படி நடப்பதை உணர்ந்து திரிய ஆரம்பித்தார்கள். ஒரு நாள் துக்கத்தால் பீடிக்கப்பட்ட ராஜா மனத்தில் ராணியைக் கொன்று தின்போம் என்ற பாவமான எண்ணம் தோன்றியது ராணிக்கு இந்த விஷயம் தெரிந்தவுடன் கீழ்க் கண்டவாறு சொன்னாள் 'ஏ மகாராஜா தங்களுடைய முகத் தாமரை கவலையால் பீடிக்கப்பட்டுள்ளது இப்பொழுது என்னுடைய மாமிசத்தை உண்டு தாங்கள் உயிர் பிழையுங்கள். இதைக் கேட்ட அந்த கொடிய பாவி ராணியைக் கொன்று மாமிசத்தைத் தின்ன உட்கார்ந்த போது இரண்டு சிங்கங்கள் தங்களுக்குள் விளையாடிக் கொண்டு அங்கு வந்தன. சிங்கங்களைப் பார்த்த ராஜா பயந்து ஓடினான். கொஞ்ச தூரம் ஓடிய ராஜா அங்கு 4 பிராமணர்களைக் கண்டு அவர்களை கொன்று தின்ன முயன்ற போது அவர்களுடைய பூணுலையும், மான் தோலையும் பார்த்தவுடன் தெய்வாதீனமாக ராஜா புத்தியில் விழுந்து ஸ்திரீயையும், பிராமணர்களையும் கொன்று பிரும்மஹத்தி செய்தேன். இதனால் மனிதர்கள் 100 பிறப்புகள் வரை நரகத்தில் வாசம் செய்ய நேரிடும். மேலும் ஸ்திரியின் கொலையால் 50 கல்பம் பாவம் சேரும். நான் பெரிய கொடிய பாவத்தைச் செய்துள்ளேன்'' என்று வருந்தினான். இப்படி நினைத்துக் கொண்டே ராஜா பூரித்யும்னன் சாகல்ய முனிவரிடத்தில் சென்று நடந்த எல்லாவற்றையும் தெரியப் படுத்தி பிராயச் சித்தத்தைப் பற்றி வினவினான். அப்போது கருணை பாவத்தோடு முனிவர் சொன்னார் '' ஏ துஸ்டனே! இப்பொழுது நீ 5 கருப்பு துணியை உடுத்திக்கொள். எப்போது காசியைத் தரிசிக்கிறாயோ அப்போதே துணிகள் வெள்ளையாகி விடும்'' இதனைக் கேட்டு பூரித்யும்னன் 7 தினங்களில் எல்லா ஜீவ ராசிகளின் பயத்தைப் போக்கும் காசியை அடைந்த போது,

காசியின் தரிசனத்தின் மூலம் எல்லா துணிகளும் சரத் காலத்தில் (வேனிற் காலத்தில்) பிரகாசிக்க ஆரம்பித்தன. மேலும் இக் கொடிய பாவி காசியில் தினம் ஸ்ரீ கங்கையில் குளித்து விட்டு ஸ்ரீ விசுவேஸ்வரரை தரிசித்து வணங்கவும் ஆரம்பித்தான். ''கங்கை கங்கை தான்'' என்று கோஷமிட்டதன் மூலமாகவும் ஸ்ரீ விஸ்வநாதர், மணி கர்ணிகா ஆகியவுர்களை தரிசித்து பூஜித்ததாலும், தாரக மந்திரத்தின் பிரபாவத்தால் இந்த க்ஷேத்ரத்தில் சிவ பதவியடையும் பாக்கியம் கிடைத்தது. இதனால் ''முனிவர்களே! காசியில் எந்த இடமாக இருந்தாலும் எத்தகைய கொடிய பாவிக்கும் இறக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அவனுக்கு அவசியம் மோட்சம் கிட்டும் என்றால் தர்மம் செய்பவர்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது''

மூன்றாவது அத்தியாயம்

ப்ருகு முனிவர் சொன்னார் ''முனிவர்களே! எந்த காசியில் மலையில் தோன்றும் கங்கையும், மணிகர்ணிகா மண்டபமும், சாட்சாத்காரமான ஆதி சிவ லிங்கமும் விஸ்வநாதரும் இருக்கிறார்களோ அந்த காசியின் மகிமையைப் பற்றி நான் என்ன கூற இயலும்? எந்த ஒருவன காசியில் வசித்துக் [illegible] ஏதாவதொரு பாவ காரியத்ந்த செய்கிறானோ அவன் 300 வருடம் கொடிய பிசாசாக திரியக் கடவன். ஆகையால் காசியில் வசித்துக் கொண்டு எப்போதும் தர்மத்தை கடை பிடிக்க வேண்டும். மேலும் விஸ்வநாதர் காசியில் இருந்து கொண்டு எல்லா ஜீவ ராசிகளுக்கும் தாரக மந்திரத்தை உபதேசிக்கிறார். இதன் மகிமையால் ஒருவனுக்கு மோட்சம் அவசியம் கிட்டும். ஒரு சமயம் சரஸ்வதி நதிக் கரையில் வசிஷ்ட முனிவரிடம் வாம தேவ முனிவர் சென்று உரையாடும் போது ஸ்ரீ காசியின் வேத மகிமையைப் பற்றி வாமதேவர் சொன்னார் 'தவவலிமை பெற்றவரே' விஸ்வநாதருடைய க்ஷேத்ரமாண இந்த காசியில் பாவம் செய்தவன், புண்ணியம் செய்பவர்கள் எல்லோருக்கும் சிவன் நல்ல கதியைக் கொடுக்கிறார். மேலும் தானும் எப்போதும்

இங்கே வ்சிக்கிறார். ஆனால் உலகத்தில் இந்த வாரணாசி சிவ சங்கரனுடைய ஆனந்தத்திற்குக் காரணமானது உலகத்தில் அனேக தீர்த்தங்கள் இருந்தாலும் பரிசுத்தம் செய்வதற்கு காசி இருக்கிறது. அதனுடைய புண்ணியத் தன்மை பலவிதப்பட்டது எவர் இங்கு ஒரு வருஷம் ஒரு பிராமணருக்கேனும் உணவளிக்கிறாரோ, அவருக்கு கங்கையில் எத்தனை பெண்கள் உள்ளனரோ அத்தனை பேருக்கும் உணவளித்த புண்ணியத்தின் பலன் உண்டாகும். எந்த மனிதர்கள் காசியில் எப்போதும் வசிக்கிறார்களோ அவர்கள் சிவனுக்கு சமமானவர்கள். இவ்விதம் வசிஷ்டருக்கும், வாமதேவருக்கும் உரையாடல் நடந்த பின்பு இருவரும் காசி நோக்கிச் சென்றனர். காசியின் சமீபம் சென்ற போது, அங்கு காட்டில் உள்ள விகராலோன்மாலி என்ற அரக்கனுடைய பலவித கொடிய வீல், அம்பு வித்தையைக் கண்ணுற்றனர். அரக்கத் தலைவன் ''டக்'' என்பவன் வசிஷ்டர் வாமதேவர் இவர்களைக் கண்டவுடன் ''அரக்கனே! இந்த இரு புருஷர்களையும் சீக்கிரம் கொன்று விடுங்கள். இந்த வசிஷ்டருடைய மகன் பராசரன் அரக்கர்களை எல்லா யாகமும் செய்து நம்முடைய தகப்பனாரை குடும்பத்துடன் அழித்தான்'' என்று சொன்னான். இந்தக் கட்டளையைக் கேட்டு அரக்கர்கள் ஓடிய போது சிவன் கோபத்துடன் மூன்றாவது கண்ணைத் திறந்து அரக்கர்களை சாம்பலாக்கி, வசிஷ்டர், வாமதேவர் ஆகியவர்களுடைய கஷ்டத்தைப் போக்கி விட்டு மறைந்தார். மேலும் அவ்விருவரும் காசியையடைந்து 3000 வருடங்கள் தவம் செய்த போது சிவன் பிரசன்னமானார். விஸ்வநாதரிடம் காசியில் நிரந்தரமாக வசிக்க வரம் வேண்டி காசியில் வசிக்க ஆரம்பித்தனர், எந்த யாத்திரிகர் அந்த முனிவர்கள் வசித்த இடத்தைச் சென்று தரிசித்து அந்த கதையையும் கேட்கிறார்களோ அவர்களுக்கு காசியில் வசிப்பதில் எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் அவைகள் நாசமாகிவிடும்.

நான்காவது அத்தியாயம்

ஒரு சமயம் யாக்ஞவல்க்யர் பின்வருமாறு கூறினார் ''தோஷமற்ற விஸ்வநாதருடைய காசி நகரத்தில் யார் உயிர் துறக்கிறார்களோ அவர்களுக்கு மோக்ஷம் நிச்சயம் கிட்டும். காசியில் பிரம்ம ஸ்வருபமான ஆயிரக் கணக்கான லிங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் ஜோதி லிங்கமாக இருக்கும் விஸ்வநாதர். இவரை தரிசிப்பதனால் உண்மையிலேயே மோக்ஷம் உண்டாகிறது. ஞானவாவியினுடைய ஜலத்தைச் சேருவதால் ஆச்சரியமான பார்வை உண்டாகும். ஒரு சமயத்தில் ஸ்வேத தேச அரசன் 1000 வருஷம் காசியிலும், 100 வருஷங்கள் வரை கைலாசத்திலும் அரசு புரிந்துவிட்டு சிவனால் அனுப்பப் பட்ட துர்வாச முனிவரைக் கொன்று காசியில் யாகங்கள் செய்தான். இவ்வாறு இது புனிதமான ஒரு நகரமாகும். காசியில் பிரும்மா பத்து அசுவமேத யாகங்கள் புரிந்தார். சிவனுடன் அதிக சர்சசை செய்து விட்டு பிரம்மா சொன்னார் ''காசியும், காசி மக்களும், காசியில் இறக்க வருபவர்களும் கொடுத்து வைத்தவர்கள். காசியில் வந்த காமம் முதலான அநர்த்தங்களில் (உதவாத விஷயங்களிலிருந்து) விலகி இருப்பாராக'' ஒரு சமயம் நாரதர் ''மருத்திலுடைய யாகத்திற்குச் சென்று விட்டு காசியின் மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்து சூரிய நாராயணரிடம் காசியின் மகிமையைப் பற்றி வினவினார். சூரிய நாராயண பகவான் சொன்னார்.'' ''நாரதரே! நீர் யாகத்தில் கேள்விப்பட்டவையெல்லாம் சத்தியமேயாகும். எல்லா மனிதர்களுடைய கருமாக்களும் மோக்ஷத்திற்கு உதவிகரமாக இருக்கலாம். ஆனால் காசியில் இறப்பவர்களுக்கு காசி என்று சொல்லப்படும் இரண்டு எழுத்தானது உதவிக்கு வந்து பாவிகளுக்கும் புண்யாத்மாக்களுக்கும் தாரக மந்திரத்தின் மூலம் மோக்ஷத்தை அளிக்கிறது. எருமையின் மேல் யாத்திரை செல்லும் வாய்ப்புக் கிடைத்தாலும் பாவிகள் நரகவாசலுக்கு செல்வதில்லை'' இவ்விதமாக சூரிய நாராயணர் நாரதரிடம் சொன்னவுடன் நாரதர் சந்தோஷமடைந்து தன்னுடைய உலகத்திற்குச் சென்றார்.

ஐந்தாவது அத்தியாயம்

''முனிவர்களே! ஒரு சமயம் காசியில் சுந்தனன் என்ற பெயருடைய ஒரு சிவ பக்திமானான ராஜாவால் செய்யப்பட்ட சிவனுடைய யாகத்தில் சந்தகுமாரர் சென்று காசி மகிமையை வர்ணணை செய்து சொன்னார். யமுனை நதிக் கரையில் ''மௌன'' என்ற பெயருடைய முனிவரும், அவனுடைய சிஷ்யர்களான மாண்டவ்யன், முத்கலன் என்பவர்களும் வசித்து வந்தார்கள். அவர்களில் மாண்டவ்யன் பலி ராஜா நடத்திய யாகத்திற்குச் சென்றான்.மேலும் காசியினுடைய மகிமையைப் பற்றி கேள்விப் பட்டு யஞ்யம் முடிந்தவுடன் பலி ராஜாவுடன் காசி வந்தடைந்தான். இதனிடையில் மௌன முனியும் காசி வந்திருந்தார். ஆகவே மாண்டவ்யனும், பலியும் மௌன முனியைப் பார்த்து வணங்கி, மணிகர்ணிகா தடத்தில் நீராடி ஸ்ரீ விஸ்வநாதரை சேவித்து காசியின் மகிமையைப் பற்றிக் கேட்ட போது மௌன முனிவர் விளக்கமாக மோக்ஷத்தை அளிக்கும் காசியின் மகிமையைப் பற்றி சொன்னார். ''ஏ பலி! எந்த மனிதன் காசியில் தர்மம் செய்து எப்போதும் வாழ்கிறானோ அவனுக்கு மோக்ஷம் அவசியம் கிடைக்கும். மேலும் பாபம் எவன் செய்கிறானோ அவன் அவசியம் எருமையின் மேல் சவாரி செய்யும் பாக்கியம் கிடைக்கிறது.'' இதைக் கேட்டவுடன் பலி காசியில் சிவ மூர்த்தியை ஸ்தாபித்துத் தன் ஊருக்குத் திரும்பினார். ஸ்ரீ காசியில் திருவோதாசன் என்ற ராஜா மக்கள் செல்வமில்லாமல் இருந்தான். ஆகவே அவன் ராணியுடன் புத்ர அர்த்த நிகும்ப தெய்வத்திற்கு ஒரு வருடம் சேவை செய்தான். ஆனால் மகன் பிறவாததால் கோபமடைந்து நிகும்பருடைய கோவிலை உடைத்த போது நிகும்பர் உன்னுடைய இந்த அநியாயததால் காசி 1000 வருஷம் வரை சூன்யமாக இருக்கும் என்று சாபம் கொடுத்தார். மறுநாள் காலையில் திவோதாஸை கொல்வதற்காக ''தால் ஜங்கா'' என்ற ராஜா வந்தான். பிறகு நடந்த கோரமான சண்டைக்குப் பிறகு திவோ[illegible]ஸ் தோற்று பரத்வாஜருடைய ஆசிரமத்தை அடைந்தான். மேலும் மேலே

சொல்லப்பட்ட ராஜா இருவரும் தங்கள் சண்டையில் காசியை சூன்யமடையச் செய்தனர். ராஜா திவோகாஸ் பரத்வாஜரிடம் நடந்தவை எல்லாவற்றையும் கூறிய போது பரத்வாஜர் காசியின் மகிமையைப் பற்றிக் கூறி புத்ரகாமேஷ்டி யாகம் செய்தார். ராஜாவுக்கு ப்ரதர்தனன் என்ற பெயருடைய மகன் பிறந்தான். இவன் மூலமாக கொடியவனானதால் ஐங்கா ராஜா கொல்லப் பட்டான். மேலும் 1000 வருஷம் சூன்யம் தொடர்ந்தது. பிறகு திவோதாஸ காசியில் சாஸ்திரபூர்வமான யாகம் செய்து மோக்ஷமடைந்தான்.

- முற்றும் -

பஞ்சகோசி யாத்திரை

இந்த யாத்திரையை வருஷத்தில் இரு முறை செய்ய வேண்டும். இதன் மூலமாக காசியில் செய்யப்பட்ட பாவம் நசித்துவிடும்.

மண்கர்ணிகாயை	நம
சோமநாதாய	நம
தத்ரைவ மணிகர்ணிகேஸ்வராய	நம
விருபாக்ஷாயை	நம
அகரே லித்தி விநாயகாய	நம
அக்ரே தாரக நாதாய	நம
அக்ரே கங்கா கேசவாய	நம
லலிதா கர்ட் லலிதா தேவ்யை	நம
ஜராசந்தேஸ்வராய	நம
மீரகாட் சோமேச்வராய	நம
மானமந்திர் தாலப்யேச்வராய	நம
தத்ரைவ சூல டம்கேச்வராய	நம
தசாஸ்வமேத-ஆதிவராஹேஸ்வராய	நம
தத்ரைவ சர்பேச்வராய	நம

பான்டேகாட் ஹனுமதீஸ்வராய	நம
கேதார்காட் தேகாரேஸ்வராய	நம
ஹனுமான் காட்-லீலார்காய	நம
பதைனி அர்க விநாயகாய	நம
த்தரைவ சங்கமேஸ்வராய	நம
அஸ்ஸீசங்கம	நம
துர்காகுண்டாய	நம
துர்காதி நாயகம்	நம
துர்காதேவ்யை	நம
த்ரைவ் விச்வேச்வராய	நம
மார்க்கமே கர்தமேஸ்வராய	நம
கர்தமதீர்த்தாய	நம
த்தரைவ சாமுண்டாயை	நம
அக்ரே மோக்ஷேஸ்வராய	நம
அக்ரே காவ்ம் மே வருணவக்த்ரேஸ்வராய	நம
தத்ரைவ வீரபத்ரேஸ்வராய	நம
அக்ரே காவ்ம் மே விகாடக்ஷ துர்காயை	நம
தத்ரைவ உன்மத்த பைரவாய	நம
அக்ரே காவ்ம் மே நீலவர்ணாய	நம
த்தரைவ கலிமடாய	நம
த்தர விமல துர்காயை	நம
அக்ரே மஹாதேவாய	நம
நந்திகேச்வராய	நம
அக்ரே ப்ரங்கி கீட கணாய	நம
அகணிப்ரியாய	நம
தத்ரைவ விரூபாக்ஷாய	நம
கௌரகாவ்ம் மே யக்ஷேஸ்வராய	நம
விமலேச்வராய	நம
ஞானலேச்வராய	நம

அம்ருதேச்வராய	நம
கந்தர்வசாகராய	நம
பீம சண்டி பீம சண்டி தேவ்யை	நம
தத்ரைவ சண்டிகாயை	நம
ரவிகாக்ஷ கந்தர்வயமல த்தரைவ நரகார்ணவ தாரகாய	நம
சவாத நமவந்த ஏக பதாகணாய	நம
மஹாபீமாய	நம
அக்ரே தல்வார் பைரவாய	நம
அக்ரே காம்வ் மே பைரவ வைவ்யதாசாய	நம
பூத நாதாய	நம
அக்ரே-சோமேஸ்வராய	நம
சித்தசாகராய (ப்ரஸித்தம்)	நம
காலநாதாய	நம
டௌஸா காம்வ் மே-கபர்தீஸ்வராய	நம
அக்ரே கணேஸ்வராய	நம
அக்ரே வீரபத்ராய	நம
சௌகண்டீ காவ்ம் மே சக்ரமுகாய	நம
த்தரைவ கணநாதாய	நம
சௌகண்டீ க்ராமே தேவ விநாயகாயப்ரசித்தம்	நம
ஷோடச விநாயகாய	நம
புட்லீ காவ்ம் சே உக்லேசேஸ்வராய	நம
த்தரைவ ருத்ரகணாய	நம
அதிதோமப்யை	நம
அக்ரே ராமேஸ்வராய	நம
தத்ரைவ சோமேச்வராய	நம
தத்ரைவ பரதேச்வராய	நம
த்தரைவ சத்ருக்னேஸ்வராய	நம
நகுஷேச்வராய	நம
த்தரைவ த்யாவாபூமீஸ்வராய	நம


தத்ரைவ அஸம்க்யாததீர்த்தேப்யோ	நம
வருணாபார அஸம்க்யாத லிங்கேப்யோ	நம
தத்ரைவ தேவசந்தேச்வராய	நம
கமிரா காம்வ் மே-பாஸ பாணிவிநாயகாய	நம
லேன் மே-ப்ருத்வீஸ்வராய	நம
கஜுரீ காவ்ம் மே வமக்யோ	நம
தத்ரைவ யவஸ்ரா வர்ணாய	நம
தீனதயால்புர விருஷபத்வஜதீர்த்தாய	நம
கபிலதாரா மே விருஷபத்வஜாய	நம
தத்ரைவ ஜ்வாலா ந்ரஸிம்ஹாய	நம
பதுவா காம்வ் சங்கமேஸ்வராய	நம
த்தரைவ ஸர்வ விநாயகாய	நம
தத்ரைவ ஆதிகேசவாய	நம
ப்ரஹ்லாத்காட்-திரிலோசனேஸ்வராய	நம
த்ரிலோசன் பஞ்சகங்காயை (ப்ரஸித்தம்)	நம
விந்தி மாதவாய	நம
த்தரைவ வசிஷ்ட வாம்தேவேப்யோ	நம
சங்கடாகாட் யவதரேஸ்வராய	நம
தத்ரைவ மஹேஸ்வராய	நம
மணிகர்ணிகா சப்தாவரணா விநாயகாய	நம
ப்ரஹ்மநால ஷட்பஞ்சசாசத் விநாயகேப்யோ	நம
த்தரைவ மணிகர்ணிகாயை (ப்ரசித்தம்)	நம
முக்திமண்டபாய (ப்ரஸித்தம்)	நம
விஸ்வவேஸ்வராய (ப்ரஸித்தம்)	நம
த்ரவாணயே	நம
துண்டிவாணயே	நம
பைரவாய	நம
ஆதித்யாய	நம
பாடாதி பஞ்ச விநாயகேப்யோ	நம
இதி பஞ்சக்ரோஸியாத்ரா சம்பூர்ணம்	நம

ஸ்ரீ கங்கா ஜீ கீ ஆரத்தி (புகழ் மாலை)

ஓம் ஜய கங்கே மாதா! ஸ்ரீ கங்கே மாதா!
ஜோ நர தும்கோ த்யாதா! ஜோ நர தும்கோ த்யாதா
மன வாஞ்சிப் பல பாதா! ஓம் ஜய கங்கே மாதா!
சந்த்ர ஸீ ஜ்யோதீ, தும்ஹாரீ நிர்மல் ஜல் ஆதா!
சரண் படே ஜோ தேரீ சரண் படே ஜோ தேரீ!
ஸோ நர தர் ஜாதா! ஓம் ஜய கங்கே மாதா!
புத்ர சகர ஜே தாரே தும், சப் ஜங்கீ தீ தாரா!
க்ருபா த்ருஷ்டி தும்ஹரரீ, க்ருபாதிருஷ்டீ தும்ஹாரீ!
த்ரிபுவன் சுக தாதா! ஓம் ஜய கங்கே மாதா!
ஏக் ஹீ பார் ஜோ தேரீ சரணாகதி ஆதா
யம்கீ த்ராஸ் மிடாகர் யமகீ த்ராஸ் மிடாகர்!
பரம் கதி பாதா! ஓம் ஜய கங்கே மாதா!









Publisher:-

SHRI KRISHNA PUSTAK BHANDAR

C.K. 39/79 CHOWK,(CHITRA) VARANASI-221001


SKPB
SHRI KRISHNA PUSTAK BHANDAR, Chowk (Chitra), VARNASI .